# TOR TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்


ஜூலை 2025 | மலர் -04 | இதழ் - 4 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/-



## பதுங்கும் அண்ணாமலை பாய்வதற்கா

## பாமகவில் தந்தை - மகன் சடுகுடு சண்டை

## விழிபிதுங்கும் விசுவாசிகள்


EPIC TOYOTA
Epic Toyota
எபிக் டொயோட்டா
TOYOTA TRUST
CAMRY
HEV
Toyota Vaanga
Epic ku Vaanga
EPIC TOYOTA
EPIC TOYOTA
MOUNT ROAD,CHENNAI | VYASARPADI, CHENNAI
9500007575 | 9500007979



நிறுவனர் & தலைமை ஆசிரியர்
**சி.நவின் பிரகாஷ்**

# தொகுப்பாளர் உரை

**Tiimes of Republic** நாளிதழ் சார்பாக உங்கள் அனைவருக்கும் பக்ரீத் மற்றும் மொஹரம் பண்டிகை தின வாழ்த்துக்கள்

இந்த மாதம் நடைபெற்ற பேசும் பொருளாகிய விவாதங்கள், பல பிரபலமான நிகழ்வுகளை தங்களது கருத்துக்களின் மூலம் பதிவு செய்துள்ளோம். பாமகவில் தந்தை, மகன் இடையே நடைபெறும் தீராத மோதல், முதல்வர் வேட்பாளரான விஜய், தமிழகத்தில் புதிதாக கூட்டணி ஆட்சிக்கான அஸ்திரம், நாட்டையே உலுக்கிய திருப்புவனம் லாக்அப் டெத் போன்ற பல்வேறு சுவராஸ்ய தகவல்களை தாங்கி வருகிறது இந்த இதழ். இவை அனைத்தும் வாசகர்கள் இடையே மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பல்வேறு விவாதங்களுக்கும் வித்திட்டவை. நமது **Times of Republic** நாளிதழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் உங்களின் பேராதரவுடன் வளர்ந்து வரும் சக்தி வாய்ந்த ஊடகமாக திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. வாசகர்கள் ஆகிய நீங்கள் தான் எங்களுக்கு ஆணி வேர். உங்களால் தான் இமயத்தை தொட முடியும். என்றும் உங்கள் ஆதரவோடு பயணிக்கிறோம்.

**– Times of Republic**
**குழுவின் சார்பாக நன்றிகள்!**



முதன்மை ஆசிரியர்
**ஜெ. சாமிநாதன்**

# தலையங்கம்

திருப்புவனம் லாக் அப் டெத்- நாட்டையே உலுக்கிய சம்பவம் தமிழகத்தில், மீண்டும் சாத்தான்குளத்தை கண்முன் நிறுத்தி உள்ளது. அஜித்குமார் எனும் ஒரு இளைஞனின் உயிரை, 6 காவலர்கள் சேர்ந்து அடித்தே கொன்று இருப்பது, நவீன கால உலகத்தில் மனிதர்களின் பரிமாணம் இன்னும் மாறாமல் இருப்பதை வெளிகாட்டி இருக்கிறது. மேல் அதிகாரி உத்தரவுக்கு கட்டுப்படுகிறோம் என கூறிக்கொண்டு இத்தகைய படுபாதக செயல்களை அரங்கேற்றி இருக்கிறார்கள். காவல்துறையின் ஈரல் கெட்டுப்போய் விட்டது என, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும்போது கூவும் அதே கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் இந்த சம்பவத்துக்கு சப்பைக் கட்டு கட்டுவது பல ஆண்டுகளாக நாம் பார்த்து வரும் தேர்தல் வாக்குறுதிகளை போன்றது. குற்றவாளிகளை, குற்றம் சாட்டப்பட்டவர்களை, விசாரணைக்கு அழைத்துச் செல்பவர்களை எப்படி நடத்தவேண்டும் என, சட்டத்தில் பல்வேறு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. காவல் உடையை மாட்டி விட்டால் தங்களை வேறு ஜீவராசிகளாக நினைத்துக் கொண்டு அராஜகங்களை நிகழ்த்தும் மனித வடிவில் இருக்கும், அவர்கள் எப்போது தான் திருந்துவார்கள். சக மனிதனை அடிக்கும் உரிமையை, நாட்டின் முதல் குடிமகனாக ஜனாதிபதிக்கு கூட வழங்காத அரசியல் அமைப்பு சட்டம், காவல் துறைக்கு மட்டும் வழங்கி உள்ளது. நீதி வழங்கும் நீதி அரசர்களே, குற்றவாளிகளுக்கு தண்டனையை மட்டும்தான் வழங்குகிறார்கள். ஆனால் காவல் துறை கட்டுக்கடங்காத அதிகார வேட்கையில் இருப்பதாக பாவித்துக் கொண்டு, செயல்படுவது எந்தவிதத்தில் நியாயம்.

காவல்துறை உங்கள் நண்பன் என கூறிக் கொண்டு, இதற்கு முற்றிலும் எதிரான செயல்களில் ஈடுபடுவது நிறுத்தப்படவேண்டும். காவல் துறையில் எத்தனையா, நல்ல அதிகாரிகள், காவலர்கள் இருந்தாலும், உயிரை பறிக்கும் அளவுக்கு மனிதத்தை மறந்துவிட்டு, மல்லாக்க படுத்துக்கொண்டு எச்சில் துப்பும் இதுபோன்ற கல்நெஞ்சம் கொண்டவர்களை என்ன செய்வது. திருப்புவனம் சம்பவத்தில் அம்புகளுக்கு மட்டும் தண்டனை. ஏவியவர்களுக்கு...

# TIMES OF REPUBLIC

TOR

VOICE OF TAMILNADU


ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:

சி.நவீன் பிரகாஷ்

முதன்மை ஆசிரியர்:

J.சாமிநாதன்

தலைமை நிருபர்கள்:

J.நவநீதகிருஷ்ணன்
S.ஜாகிர் ஹூசேன்
D.தாகூர்
B.ஹரிஹரசுதன்
S.நடராஜ்
K.கார்த்திகேயன்
சிவக்குமார்
ஐயப்பன்
கணேஷ்

அட்வைசரி உறுப்பினர் பேனல்:

சேகர், எஸ்.பி., ( சிறைத்துறை ஓய்வு)

சட்ட ஆலோசகர்கள்:

R.C.பால்கனகராஜ்
கிருஷ்ணகுமார்
ஜெ.ரூபன்
கார்த்திக்
கீர்த்திவாசன்

Digital Associate news contributors:

J.எபினேசன்
B.விக்னேஷ்
சாந்தகுமார்
C.துரைகணேஷ்
K.சித்தார்த்தன்
தினேஷ் கௌர்
தினகரன்
அருணாச்சலம்
சிரில்
R.மெரில்பர்ட் தாஸ்
S.கவியரசு
அக்பர் பாஷா
A.நரேஷ் குமார்
செந்தில்குமார்
கோபி அனந்த்
M.ரிச்சேஷ் ராஜ்
E.ரூபர்ட்
A.பிரேம்குமார்
D.விக்னேஷ்
பிரமோத்
சரண்யா
வேலுமணி
பெரிய ஸ்வாமி
சிவராஜ் குமார்
பாரி
தாமரைக்கனி
S.I.நாராயணன்
செல்வம்
பிரபா
பாஸ்கோ மாணிக்கம்
K.கார்த்திகேயன்
K.V.பாலச்சந்திரா
G.சதீஷ்குமார்
B.அரசகுமார்
கார்த்திக்
A.இஸ்மாயில்
சேகர்
ரேவதி
K. கார்த்திகேயன்
K.V.பாலச்சந்திரா
கீர்த்திவாசன்

சீனியர் விஷூவல் எடிட்டர்கள்:

ஆண்டோ M
சுகேஷ்
P.அரசகுமார்

விஷூவல் எடிட்டர்கள்:

கதிர்
M.R.கலைவண்ணன்

கிராபிக் டிசைனர்:

B.சதீஷ்குமார்
M.யோகலட்சுமி
A.இஸ்மாயில்

வாய்ஸ் ஓவர் ஆர்டிஸ்ட்:

ரேவதி

# உள்ளடக்கம்




06 **பாமகவில் நடக்கும் சடுகுடு சண்டை**

பாமகவில் தந்தை- மகன் இடையே நடக்கும் மோதலால் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் விழிபிதுங்கி நிற்கிறார்கள்...





10 **அதிமுக - பாஜக கூட்டணி ஆட்சியா**

2026ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் அதிமுக- பாஜக கூட்டணி உதயமாகி உள்ளது...

12 **திருப்புவனம்- லாக் அப் டெத்**

திருப்புவனத்தில் கோயில் காவலாளி அஜித்குமார், போலீஸாரால் காவு வாங்கப்பட்ட நிகழ்வு நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது..





15 **நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவை சிக்க வைத்த கொக்கைன்**

நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவை சிக்க வைத்த கொக்கைன்




# பாமகவில் நடக்கும் சடுகுடு சண்டை



- **தந்தை, மகனுக்கும் இடையே வெடித்த மோதல்**
- **விழிபிதுங்கும் நிர்வாகிகள்-தவிக்கும் தொண்டர்கள்**
- **கைகூடியதா பாஜகவின் விளையாட்டு**
- **கட்சி மாறுவார்களா நிர்வாகிகள்**
- **வெற்றி மாம்பழம் யாருக்கு**

சமூக நீதி கொள்கையை முன்னிறுத்தி 1989-ல் மருத்துவர் ராமதாஸால் தொடங்கப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியில் அதன் நிறுவனரான தந்தை ராமதாஸுக்கும், தலைவராக உள்ள மகன் அன்புமணிக்கும் இடையே யார் பெரியவர் மோதல் உச்சகட்டத்தை எட்டி இருப்பதால், நிர்வாகிகளும், தொண்டர்களும் கடும் குழப்பத்தில் உள்ளனர். இருவரும் மாறி மாறி மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடத்தி, தந்தை நிர்வாகிகளை நீக்குவதும், மகன் மறுபடி நியமிப்பதும், புதிதாக நிர்வாகிகளை உருவாக்கி அறிவிப்பதும் என சடுகுடு ஆட்டம் அரசியல் அரங்கில் களைகட்டி உள்ளது.

கட்சியின் இளைஞரணி தலைவராக தனது மூத்த மகள் காந்திமதியின் மகனான முகுந்தனை, ராமதாஸ் நியமித்ததற்கு எதிராக அன்புமணி, மேடையிலேயே கொந்தளித்தது தான், ராமதாஸின் குடும்ப சண்டை வீதிக்கு வந்ததற்கு காரணம். இதனால் மனம் உடைந்த ராமதாஸ், நான் உருவாக்கிய கட்சி, என்ற இறுமாப்பில் வியாழக்கிழமை தோறும் செய்தியாளர்களை சந்தித்து, மகன் அன்புமணி மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை கூறி, தொண்டர்களை திகைப்படையச் செய்து வருகிறார். தொடர்ச்சியாக அன்புமணியை தலைவர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு செயல் தலைவராக அறிவித்தார். இதனால் கொதிப்பும், வேதனையும் அடைந்த அன்புமணி, நான் தான் தலைவர், என, கூட்டம் நடத்தி பலத்தை காட்டி வருகிறார்.

இப்படியாக ராமதாஸ் குடும்ப சண்டை தற்போது தமிழக அரசியல் வட்டாரத்தில் முக்கியமான பேசு பொருளாக மாறிவிட்டது. ஒருபுறம்

ஆளும் திமுக அரசை அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் வீட்டுக்கு அனுப்ப கங்கணம் கட்டிக்கொண்டு கூட்டணியை கட்டமைக்கும் வேலையே திறம்பட தொடங்கி விட்டது பாஜக. பிரதான எதிர்க்கட்சியான அதிமுகவை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைத்து பிள்ளையார் சுழி போட்டு விட்டார், உள்துறை அமைச்சர் அமித்ஷா. டெல்லிக்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அன்கோவை வரவழைத்து கூட்டணி டீலை முடித்த கையோடு, தமிழகம் வந்து அதனை உறுதியும் செய்தார்.

அதிமுக- பாஜக கூட்டணி வலையில் பாமகவை கொண்டு வரும் முயற்சியில் தீவிரம் காட்டி வரும் பாஜகவுக்கு, தற்போது அக்கட்சிக்குள் தந்தை, மகன் மோதலால் நினைத்ததை சாதிக்க முடியுமா என்ற குழப்பமும் உள்ளது. தேசிய அளவில் மாநில கட்சிகளை உடைத்து, தன் பக்கம் இழுக்கும் வித்தையை திறம்பட செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தது பாஜக. இதற்கு உதாரணம் மகாராஷ்டிராவில் காலம் காலமாக ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தில் ஊறிப்போன சிவசேனா கட்சியை இரண்டு துண்டுகளாக்கி, தனக்கான ஆட்சியை உருவாக்கியதே சாதனை. தந்தை, மகன் மோதலால் பாஜகவின் யானைப் பசிக்கு பாமகவும் இரையாகி விடுமோ என்ற சந்தேகம் தொண்டர்கள் மத்தியில் நீருபூத்த நெருப்பாக தெரிய தொடங்கிவிட்டது.

தமிழகத்தில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜக கூட்டணியில் சேர்ந்து போட்டியிட்ட 7 தொகுதிகளிலும் மண்ணைக் கவ்விய பாமக, மீண்டும் அதே கூட்டணியில் சேர ராமதாஸ் விரும்பவில்லை. ஆனால் அன்புமணியோ, மத்திய சுகாதார துறை அமைச்சராக இருந்தபோது தன் மீது மருத்துவக் கல்லூரி முறைகேடு வழக்கு தொடர்பாக டெல்லி சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு பயத்தால் பாஜக கூட்டணிக்கு காவடி தூக்க தயாராகி விட்டார். இந்த வழக்கில் ஜாமினில் வெளியே உள்ள அன்புமணிக்கு, இதே வழக்கை துருப்புச் சீட்டாக பயன்படுத்தி, கூட்டணிக்கு இழுக்க தூண்டில் போடும் பாஜக ஒருபக்கம். இதற்கு சிம்மசொப்பணமாக அவரது தந்தை ராமதாஸ் மறுபக்கம். இந்த இடியாப்ப சிக்கலால் பாஜக ஆடிட்டர் குருமூர்த்தியையும், அதிமுக சார்பில் சைதை துரைசாமியையும் ராமதாஸிடம் சமரசம் பேச அனுப்பியது பாஜக.

இந்தப் பேச்சுவார்த்தையும் பாஜகவுக்கு எந்த பலனையும் தரவில்லை.

மதுரையில் பாஜக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்ற அமித்ஷா, பாமக கூட்டணியில் சேர்ந்துவிட்ட அறிவிப்பை வெளியிட தயாராக இருந்தார். ஆனால் மாம்பழம் பழுக்காததால் ஏமாற்றம். ராமதாஸை பொருத்தமட்டில் கூட்டணி தாவுவதில் கில்லாடி. யார் அதிகமாக "சீட்" கொடுக்கிறார்களோ, அங்கு துண்டை போட்டு விடுவார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் கடைசி வரை அதிமுகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, அதிகாலையில் பாஜகவுடன் கூட்டணி என அறிவித்துவிட்டு, காலை உணவை கூட்டணி தலைவர்களோடு முடித்தவர் ராமதாஸ்.

பாமகவில் தந்தை, மகன் இருவரும் கூட்டணிக்காக எதையும் சமரசம் செய்து கொள்ள தயங்காதவர்கள் என்பது நாடறிந்த உண்மை, பாமகவில் இப்போது நடந்து வரும் உட்கட்சி மோதலும், வரும் தேர்தலில் கூட்டணிக்கு அழைக்கும் கட்சிகளிடம் பெரிய அளவில் பேரம் பேச எடுக்கப்படும் முயற்சியாக இருக்கலாம் என்றும் அரசியல் வட்டாரத்தில் ஒரு டாக்கும் உள்ளது. எப்படியோ நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பது போல பாஜகவின் கூட்டணி கனவும் ஜெயிக்குமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



## அன்புமணியை பற்றி ராமதாஸ்

- தலைமை பண்பு இல்லாதவர்
- தாயை பாட்டிலால் அடிக்க முயன்றார்
- வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிட்டது
- மத்திய அமைச்சராக்கியது தவறு
- கட்சிக்கு தொடர்ந்து இடையூறாக உள்ளார்
- கட்சியை தானே பார்த்துக் கொள்வதாக கூறினார்
- நான் கண்ணீர் வடித்தேன்
- உயிருள்ளவரை நானே தலைவர்
- தலைவர் பதவியை விட்டுத் தரமாட்டேன்

## ராமதாஸின் 5 நிபந்தனைகள்

- நானே நிறுவனர், தலைவர்
- கட்சியின் செயல் தலைவர் அன்புமணி
- இளைஞர் அணி தலைவர் முகுந்தன்
- அன்புமணி மனைவி சவுமியா கட்சிக்குள் வரக்கூடாது
- தனது 2 மகள்களுக்கும் சொத்துக்கள், பணத்தை பிரித்து கொடுப்பது

## அன்புமணி பக்கம் யார் யார்

- மயிலம் சிவக்குமார்- எம்எல்ஏ
- தர்மபுரி வெங்கடேசன்- எம்எல்ஏ
- மேட்டூர் சதாசிவம்- எம்எல்ஏ
- பொதுச்செயலாளர்- வடிவேல்
- ராவணன்
- பொருளாளர் திலகபாமா
- வழக்கறிஞர் பாலு

## ராமதாஸ் பக்கம் யார் யார்

**பென்னாகரம் எம்எல்ஏ- ஜி.கே.மணி**

**சேலம் மேற்கு எம்எல்ஏ- அருள்**

**வன்னியர் சங்க தலைவர்- அருள்மொழி**

**ஏ.கே.மூர்த்தி - முன்னாள் மத்திய இணை அமைச்சர் (இவர் ராமதாஸ் குடும்பத்தில் சம்பந்தம் செய்துள்ளார்)**



### 100 நாள் அன்புமணி நடைபயணம் திட்டம்

ஜூலை 25ம் தேதி தந்தை ராமதாஸ் பிறந்தநாள் அன்று அன்புமணி, தமிழகம் முழுவதும் 100 நாள் நடை பயண திட்டத்தை துவங்குவதாக அறிவித்துள்ளார். தமிழக உரிமை மீட்பு பயணம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. என்ன தான் தந்தை தன்னை வெறுத்தாலும் தந்தை தான் எங்களது வழிகாட்டி என அன்புமணி முழங்கி வருகிறார்.

### 2 எம்எல்ஏக்களுக்கு நெஞ்சு வலி

ராமதாஸ் ஆதரவு எம்எல்ஏக்களான பாமக கவுரவ தலைவர் ஜி.கே. மணி, சேலம் அருள் ஆகியார் சென்னையில் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டு, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அப்போது தான் அன்புமணி சேலம், தர்மபுரி மாவட்டங்களில் பொதுக்குழு கூட்டத்தை கூட்டி இருந்தார். இதில் பங்கேற்பதை தவிர்க்கவே நெஞ்சு வலி நாடகத்தை இருவரும் நடத்தியதாக அன்புமணி தரப்பு குற்றம் சாட்டுகிறது, அதே நேரம் அவர்கள் உடல்நலம் தேற வேண்டி, அன்புமணி குடும்பத்தினருடன் சேலத்தில் கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டார். மறுபுறம் அவர்களை தைலாபுரம் தோட்டத்தில் இருந்து சென்னை வந்து நலம் விசாரித்து சென்றுள்ளார், ராமதாஸ்.

### திமுக தான் காரணம்- அன்புமணி

பாமகவில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு திமுக தான் காரணம் என புது குண்டை வீசி இருக்கிறார், அன்புமணி. மாமல்லபுரத்தில் நடந்த சித்திரை முழு நிலவு மாநாட்டில் கூடிய கூட்டத்தை பார்த்து திமுக தலைவர் ஸ்டாலினால் ஜீரணிக்க முடியவில்லை என நேரடியாக குற்றம்சாட்டி உள்ளார். திமுக தான் பாமகவை பிரித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதாக கடுமையான விமர்சனத்தை அன்புமணி முன்வைத்திருப்பதன் பின்னணியில் பாஜக கூட்டணிக்கு அவர் ரெடியாகி விட்டது வெட்டவெளிச்சம்.



### திமுகவுக்கு என்ன அவசியம் – ராமதாஸ்

பாமகவில் நடக்கும் பிரச்சினைக்கும் திமுகவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என தடாலடியாக மறுத்துள்ளார் ராமதாஸ். அதனால் அவர்களுக்கு என்ன பிரயோஜனம் என்றும் சப்பை கட்டி உள்ளார். அன்புமணி, தந்தையிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டே இருந்தாலும் அதனை ஏற்கும் பக்குவம் ராமதாஸிடம் இல்லை. மகன் மீது தீராத கோபத்தில் இருந்து வரும் அவர், திமுகவுக்கு ஆதரவாக பேசுவதால், திமுக கூட்டணியை அவர் விரும்பும் கட்டத்தில் இருப்பது பட்டவர்த்தனம்.

### அன்புமணி பாமக- ராதமாஸ் பாமக

தற்போது பாமகவில் நிலவும் குழப்பம் காரணமாக அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் இருதரப்பும் தனித்தனி அணியாக வேறு வேறு கூட்டணியில் சேர்ந்து போட்டியிடும் சூழலும் ஏற்பட்டு இருப்பதாக, பாமகவினரே புலம்புகின்றனர். மகன் இறங்கி வந்தாலும் தந்தை இறங்கிவர மறுப்பதால் தொண்டர்கள் சோர்வடைந்து இருப்பதாகவும், கத்திசண்டை விரைவில் முடிவுக்கு வந்தால் தான் தாங்கள் கட்சி வேலைகளை தேர்தலை நோக்கி பழையபடி செய்ய முடியும் என்றும் குமுறுகின்றனர்.

**ராமதாஸை சந்தித்த செல்வப்பெருந்தகை**

தைலாபுரத்தில் ராமதாஸை, காங்கிரஸ் மாநிலத்தலைவர் செல்வப்பெருந்தகை திடீரென சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் பல்வேறு யூகங்களை உருவாக்கி உள்ளது. திமுக கூட்டணியில் ராமதாஸை இழுக்க செல்வப்பெருந்தகை சென்றதாக திட்டவட்டமாக கூறப்பட்டாலும், சமூகநீதிகாவலரான ராமதாஸை சந்திக்க சென்றதாக வழக்கம்போல் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார், செல்வப்பெருந்தகை.

**தந்தை மீது பாய்ந்த அன்புமணி**

தந்தை ராமதாஸ் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை அடுக்கிய போதும் அமைதியாக இருந்தார் தனயன். நாடாளுமன்ற தேர்தலில் தனக்கு உடன்பாடு இல்லாத நிலையிலும் கெஞ் சியதால் தர்மபுரி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கொடுத்ததாக ராமதாஸ் தெரிவித்தார். மேலும் குடும்ப பெண்கள் அரசியலுக்கு வர விருப்பம் இல்லை எனவும் கூறி இருந்தார். இதற்கு நீண்ட நாட்களுக்குப் பிறகு மௌனம் கலைத்த அன்புமணி, தந்தை சொல்வது அனைத்தும் பொய் என்றும், பொதுவெளியில் மருமகளை மாமனார் இப்படித்தான் பேசுவாரா என்றும் கேட்டு ஆதங்கப்பட்டார், கடந்த 5 ஆண்டுகளாக ராமதாஸ், தன் நிலை மறந்தும், தன்னை சுற்றி இருக்கும் சிலரது பேச்சை கேட்டு செயல்படுவதாகவும், கூறி அனைவரையும் வாய் அடைத்தார்.

**அருள் எம்எல்ஏவை கட்சியை விட்டு நீக்கிய அன்புமணி**

சேலம் மேற்கு தொகுதி எம்எல்ஏ அருளுக்கு, ராமதாஸ் கட்சியின் இணை செயலாளர் பொறுப்பு வழங்கினார். பதவி வாங்கிய கையோடு சேலத்தில் செய்தியாளர்களை சந்தித்த அருள், அன்புமணி மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். இதனால் ஆத்திரமடைந்த அன்புமணி தரப்பு, அருளை கட்சியில் இருந்து நீக்க அழுத்தம் கொடுத்தனர். இதற்கு செவி சாய்த்த அன்புமணி, விளக்கம் கொடுக்க அவகாசம் கொடுத்தார். இதனை அருள் தரப்பு மதிக்காததால் அவரை கட்சியில் இருந்து நீக்கினார்.

**அன்புமணிக்கு அதிகாரம் இல்லை- ராமதாஸ்**

அருளை நீக்க, கட்சித் தலைவரான தனக்கு மட்டுமே அதிகாரம் இருப்பதாக ராமதாஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அவரை எம்எல்ஏ பதவியில் இருந்து நீக்க கட்சி கொறடா ஜி.கே.மணியின் ஒப்புதல் அவசியம் என்றும் ராமதாஸ் கூறி இருப்பதால், இருதரப்பு முட்டல் மோதல் மோசமான கட்டத்தை எட்டி இருக்கிறது.



# அதிமுக - பாஜக கூட்டணி ஆட்சியா


| | |
|---|---|
| 1 | மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கும் பாஜக |
| 2 | வாய்ப்பு இல்லை என்கிறது அதிமுக |
| 3 | அதிமுக குடுமி பாஜக கையில் |

**2024 நாடாளுமன்ற தேர்தலில் அதிமுகவும், பாஜகவும் ஒரு தொகுதியில் கூட ஜெயிக்க முடியாமல் மண்ணை கவ்வின, ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல திமுக அணி 39-க்கு 39 என அள்ளியதால் தனித்து போட்டியிட்ட இரு அணி தலைவர்களையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. ஒரு சில தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு சில ஆயிரம் ஓட்டுகளில் பறிபோனது.**


**இந்த தேர்தலில் அதிமுக 21 சதவீத ஓட்டுகளையும், பாஜக 11 சதவீத ஓட்டுகளை தனித்து பெற்றன. திமுக அணியில் அக்கட்சி மட்டும் கிட்டத்தட்ட 27 சதவீத ஓட்டுகளை பெற்றது. திமுகவுக்கும், அதிமுகவுக்கும் இடையிலான ஓட்டு சதவீத வித்தியாசம் வெறும் 6 என்ற அளவிலேயே நீடிக்கிறது. இந்த சூழ்நிலையில் கூட்டணியில் ஏற்பட்ட மோதல் காரணமாக இருவரும் வெற்றி வாய்ப்பை இழந்து விட்டதை பாஜகவும், அதிமுகவும் உணரத் தொடங்கின,**

நாடாளுமன்றத்தில் எம்பிக்கள் எண்ணிக்கையில் நான்காவது இடத்தில் இருக்கும் (22 திமுக எம்பிக்கள்) திமுகவால் பாஜக பல்வேறு சிக்கல்களை சந்திக்கிறது. மொழி மேம்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடு, தேசிய கல்விக் கொள்கை, பட்ஜெட்டில் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் திமுகவின் எதிர்ப்பு நாடாளுமன்றத்தில் பெரும் பேசு பொருளாக இருப்பதால் பாஜக திகைத்து போய் உள்ளது. தமிழகத்திலும் ஆளும் பிரதான கட்சியாக இருப்பதால், திமுகவை வரும் சட்டமன்ற தேர்தலில் எப்படியாவது வீட்டுக்கு அனுப்பி விட வேண்டும் என்பதில் அக்கட்சி கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதற்காகத் தான் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை டெல்லிக்கு வரவழைத்து கூட்டணிக்கு சாமரம் வீசிவிட்டார், உள்துறை அமைச்சரான சாணக்கியன் அமித்ஷா. பாஜகவால் நுழையவே முடியாது என கூறப்பட்ட ஒடிசா,









டெல்லி மாநிலங்களில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்து, சாதித்தும் காட்டி உள்ளது.

டெல்லி சந்திப்பில் அதிமுக சார்பில் விடுக்கப்பட்ட நிபந்தனைகளில் மிகவும் முக்கியமானது, அண்ணாமலையை பாஜக தமிழக தலைவர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பது தான். இதற்கு பாஜக தலைமை ஒத்துக்கொள்ள மறுத்த நிலையிலும், வேறுவழி இல்லாததால் மனதை கல்லாக்கிக் கொண்டு ஏற்றுக்காள்ள வேண்டிய நிலைக்கு வந்தது. அதேநேரம் அண்ணாமலை பதவி ஏற்று 3 ஆண்டுகள் முடிந்துவிட்டதால் அதையே ஒரு காரணமாக்கி கொண்டது பாஜக.

தமிழகத்தில் அண்ணாமலை பதவி ஏற்பதற்கு முன்பு 6 சதவீதத்துக்குள் இருந்த வாக்கு சதவீதம் 2024 தேர்தலில் 11 சதவீதத்துக்கும் அதிகமானது, அக்கட்சிக்கு மிகப்பெரிய மைல்கல் என்றே பார்க்கப்படுகிறது. அண்ணாமலையால் தான் இந்த இலக்கை எட்ட முடிந்ததாக பாஜக தேசிய தலைமையும், தமிழகத்தில் கட்சி தொண்டர்களும் அவர் மீது பெரும் நம்பிக்கையை வைத்துள்ளனர். இருந்தாலும் எதிரியை வீழ்த்த, எதிரிக்கு எதிரி நண்பன் என்ற அரசியல் கோட்பாட்டை பாஜக கையில் எடுத்து அதிமுக கூட்டணியை உறுதி செய்து அடுத்தகட்ட பாய்ச்சலுக்கு தயாராகிவிட்டது. இதை சற்றும் எதிர்பார்க்காத திமுக, இரு கட்சிகளையும் மாறி மாறி விமர்சனங்களால் வறுத்தெடுத்து வருகிறது. இதற்கெல்லாம் சற்றும் சலிக்காத அதிமுக-பாஜக தலைமை அடுத்தகட்ட திட்டமிட்டலுக்கு ரெடி. திமுக ஆட்சி மீதான மக்களின் வெறுப்பு சார்ந்த விஷயங்களையும், அதிருப்தியையும் முன்னிலைப்படுத்தி வருகிறது.

### பாஜகவின் கூட்டணி ஆட்சி அஸ்திரம்

அதிமுகவுடன் வேகவேகமாக கூட்டணியை உறுதி செய்த பாஜக, மறுபுறம் தமிழகத்தில் அதிமுக தலைமையில் கூட்டணி ஆட்சி அமையும் என அமித்ஷா பேட்டி அளித்ததால் பற்றிக் கொண்டது தீ. அதிமுக தலைமை இதற்கு உடனடியாக எதிர் குரல் தெரிவித்தாலும் தங்கள் கட்சியை யாராலும் கபளீகரம் செய்ய முடியாது என எடப்பாடி பழனிசாமி சூளுரைத்து வருகிறார். ஆனாலும் பாஜக தலைவர்களோ, கூட்டணி ஆட்சி என்பதில் உறுதியாக உள்ளனர். தேர்தலில் அதிமுக கூட்டணி ஒருவேளை வென்றால் இந்தப் பிரச்சினைக்கான விடை அப்போது தெரியும்.


### குறைந்தது 50 தொகுதிகளை கேட்கும் பாஜக

2021 சட்டசபை தேர்தலில் அதிமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த பாஜக 20 தொகுதிகளில் போட்டியிட்டு 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது. கடந்த 2001ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணியில் 21 இடங்களில் போட்டியிட்ட பாஜக அதே 4 எம்எல்ஏக்களை மட்டுமே பெற்றது. 20 ஆண்டுகளுக்கு பிறகும் அக்கட்சி அதே நிலையில் தான் உள்ளது. ஆனால் பாஜகவின் நிலைமை தற்போது தமிழகத்தில் வேறு நிலையை அடைந்துவிட்டது. ஜெயலலிதா, கருணாநிதி எனும் மாநிலத்தை தீர்மானித்த இரு பெரும் தலைவர்கள் இல்லாததும், பாஜகவின் வளர்ச்சிக்கு அடித்தளம் போட்டு விட்டது. பாஜக 2026ம் ஆண்டு தேர்தலில் குறைந்தது 50 தொகுதிகளில் போட்டியிட தயாராகி வருகிறது. இதற்கு அதிமுக எதிர்ப்பு தெரிவிப்பது போல பாசாங்கு செய்தாலும் அக்கட்சிக்கு வேறு வழியில்லை. ஏனென்றால் அமலாக்கத்துறை, சிபிஐ போன்ற அமைப்புகள், அவர்கள் ஆட்சியில் இருந்தபோது ஊழல் ஆவணங்களை தூசி தட்ட ரெடியாக வைத்துள்ளது. இதனால் அதிமுகவின் குடுமி, பாஜக கையில்.

# திருப்புவனம்

# லாக் அப் டெத்

- நாட்டையே உலுக்கிய அதிர்ச்சி
- சாத்தான்குளம் சம்பவத்தை விட பயங்கரம்
- மிருங்களாக மாறிய போலீஸ் தனிப்படை
- திமுக ஆட்சியில் இதுவரை 25 லாக்அப் டெத்
- என்ன கொடுத்தாலும் அஜித்குமார்- உயிரை திருப்பித் தர முடியுமா?




சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவிலுக்கு சாமி கும்பிடச் சென்ற நிகிதா மற்றும் அவரது தாயாரால் ஒரு உயிரே அநியாயமாக பறிபோய் இருக்கிறது. மடப்புரத்தை சேர்ந்த திருமணம் ஆகாத 27 வயது இளைஞர் அஜித்குமார், கோவில் காவலாளியாக பணிபுரிந்தவர். சம்பவம் நடந்த ஜூன் 27 அன்று கோவிலுக்கு தாயுடன் வந்த நிகிதா, ஒன்பதரை சவரன் நகையை காரில் வைத்துவிட்டு, கார் சாவியை அஜித்குமாரிடம் கொடுத்துவிட்டு பார்க்கிங்கில் காரை பார்க் செய்யுமாறு கூறிவிட்டு சென்றுள்ளார்.



அஜித்குமார்

பின்னர் வந்து காரை எடுத்துக் கொண்டு செல்லும்போது நடுவழியில் நகை காணாமல் போனதாக, திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இந்த வழக்கை முதலில் விசாரித்தது என்னவோ, திருப்புவனம் போலீஸார் தான். திடீரென டிஎஸ்பி சண்முகசுந்தரத்தின் தனிப்படை வந்து எவ்வளவு கொடூரமாக விசாரிக்கமுடியுமோ அப்படியே ஜெய்பீம் படத்தில் வருவது போல் மிளகாய் பொடி, கட்டை, லத்தியால் இரக்கமின்றி தாக்கி உயிரை பறித்துள்ளது.

உயிர் பறிபோன உடன் பதற்றம் அடைந்த திமுக அரசு, திருப்புவனத்தில் அந்தக்கட்சியை சேர்ந்த முக்கிய புள்ளிகள், டிஎஸ்பி சண்முகசுந்தரம் மூலம் 50 லட்சம் ரூபாய், வீட்டு மனை, அரசு வேலை தருவதாக, பாதிக்கப்பட்ட அஜித்குமார் குடும்பத்தை அழைத்து பேரம் பேசியுள்ளது. இந்த சம்பவம் காட்டுத்தீ போல செய்தி ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் பரவியது. இரண்டு நாட்களாக இந்தச் செய்தியே செய்திச்சேனல்களில் பிரதானமாக இடம்பிடித்தது.

இதற்கிடையே மதுரை உயர்நீதிமன்றத்தில் அஜித்குமார் லாக்அப் டெத் வழக்கை சிபிஐக்கு மாற்றக்கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையின் போது நீதிபதிகள் சரமாரியாக கேள்வி எழுப்பியதோடு, வழக்கை நீர்த்துப்போக செய்யும் வகையில் செயல்பட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரித்தனர். இதனால் கலக்கம் அடைந்த அரசு, அஜித்குமாரின் உயிரை பறித்த தனிப்படை காவலர்கள், பிரபு, ஆனந்தன், கண்ணன், ராஜா, சங்கரமணிகண்டன் உட்பட 6 பேரை கைது செய்தது.

அதிமுக, பாஜக, விசிக, த.வெ.க., உள்ளிட்ட கட்சிகள் இந்த சம்பவத்தை கண்டித்து கடுமையான எதிர்வினை ஆற்றியதால் பயந்துபோன திமுக அரசு, வழக்கு விசாரணையை சிபிஐக்கு மாற்றியது,

## முக்கிய சாட்சியான வீடியோ பதிவு

அஜித்குமாரை போயில் பின்புறம் வைத்து போலீஸார் பயங்கரமாக தாக்கும் காட்சியை, சத்தீஸ்வரன் என்பவர் செல்போன் மூலம் வீடியோ எடுத்தார். பாத்ரூம் ஜன்னல் வழியாக அவர் எடுத்த வீடியோ காட்சிகள் தான் தற்போது முக்கிய சாட்சியானது. இந்த வீடியோ மட்டும் வெளிவராமல் இருந்திருந்தால்,

அரசு வழக்கை மூடி மறைக்க தேவையான அனைத்தும் செய்திருக்கும். சத்தீஸ்வரனுக்கு மிரட்டல் வருவதால் அவருக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பை இந்த அரசு வழங்கி உள்ளது.

## யார் இந்த நிகிதா

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே ஆலம்பட்டியை சேர்ந்த நிகிதாவின் தந்தை மறைந்த அரசு அதிகாரி ஜெயபெருமாள்- சிவகாமி, தாயார். தாவரவியலில் முனைவர் பட்டம் பெற்ற அவர், திண்டுக்கல் எம்விஎம் அரசு கல்லூரியில் பேராசிரியையாக உள்ளார். இவர் மீது நான்கு கல்யாண வழக்கு மோசடி இருக்கு. இவரை திருமணம் செய்த தென்னிந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் திருமாறனும் ஏமாற்றப்பட்டவர்தான். 2004ல் திருமணம் முடிந்தவுடன் முதலிரவு அன்றே ஓடிவிட்டதாகவும், விவாகரத்து வழக்கை தொடர்ந்து தன்னிடமே 10 லட்சம் ரூபாயை பறித்ததாக கூறியுள்ளார். மேலும், அரசு வேலை வாங்கித் தருவதாக பலரை ஏமாற்றி பல லட்சம் ரூபாயை நிகிதா பறித்திருப்பதாக வழக்கும் நிலுவையில் உள்ளது. இப்படிப்பட்ட மோசடி ராணி நிகிதா எப்படி நகையை காரில் வைத்துவிட்டு சென்றிருப்பார் என்பதும் பெரும் கேள்வி.

## சாத்தான்குளம் சம்பவத்தை ஞாபகப்படுத்திய பயங்கரம்

கடந்த 2020ம் ஆண்டு ஜூன் 19ம் தேதி தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் கொரோனா காலகட்டத்தில் கடையை நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைவிட 15 நிமிடம் அதிகமாக திறந்து வைத்ததாக பெனிக்ஸ் (31 வயது) கைது செய்யப்பட்டார். இதையறிந்து காவல் நிலையம் சென்ற அவரது தந்தை ஜெயராஜ் (வயது 59) இருவரும் காவல்துறையின் இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற தாக்குதலுக்கு ஆளாகி சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இருவரது ஆசன வாய்க்குள்ளும் லத்தியை சொருகி உச்சபட்ச கொடூரத்தை அரங்கேற்றியது காவல்துறை. இந்தச் சம்பவம் சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த வழக்கில் தொடர்புடைய சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், எஸ்.ஐ. பாலகிருஷ்ணன் உட்பட 9 போலீஸார் கைது செய்யப்பட்டு, கடந்த 5 ஆண்டுகளாக சிறை கம்பியை எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.



நிகிதா

# திமுக ஆட்சியில் இதுவரை 25 லாக்அப் டெத்

**2021செப்டம்பர்**
காவல் நிலையம் பரமத்தி வேலூர்- மணிகண்டன்

**2021 டிசம்பர்**
ராமநாதபுரம் காவல் நிலையம்- கல்லூரி மாணவர் மணிகண்டன்

**2022 பிப்ரவரி**
நெல்லை காவல் நிலையம்- சுலைமான்

**2022 ஏப்ரல்**
சென்னை- விக்னேஷ்

**2022ஏப்ரல்**
திருவண்ணாமலை- தங்கமணி

**2022 ஜூன்**
சென்னை- அப்பு

**2023**
7 மரணங்கள்

**2024- 2025**
இதுவரை 25 லாக்அப் டெத்



**அதே ஜூன் – கறுப்பு மாதம்**

சாத்தான்குளம் சம்பவம் நடந்ததும் அதே ஜூன் மாதம் 19ம் தேதி தான். தற்போது அஜித்குமார் கொடூரமாக கொல்லப்பட்டதும், இதே ஜூன் 27ம் தேதி தான். போலீஸாரின் காட்டுமிராண்டித்தனமான செயலுக்கு இந்த இரு சம்பவங்களுமே பெரும் உதாரணம். ஒருபுறம் காவல்துறை உங்களது நண்பன் என கூறினாலும், புகார் கொடுக்க காவல் நிலையத்துக்கு செல்லும் அப்பாவிகள் மற்றும் ஆதரவற்றவர்களின் நிலைமை சொல்லி மாளமுடியாத நிலையில் தான் இருந்துவருகிறது.

**ஐஏஎஸ் அதிகாரி- ஏடிஎஸ்பி – டிஎஸ்பி**

நகை திருட்டுப் போனதாக நிகிதா, காவல் நிலையத்தில் புகார் அளித்த கையோடு, தனது தந்தை சப் கலெக்டராக பணியாற்றியபோது சிவகங்கை ஆட்சியராக இருந்த லதா என்பவரிடமும் புகார் தெரிவித்ததாக தெரிகிறது. உடனே அவர், ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதத்திடம் கூறியநிலையில் அவரே நேரடியாக திருப்புவனம் டிஎஸ்பி சண்முகசுந்தரத்திடம் தகவல் தெரிவித்ததால், தனிப்படை மூலம் கொடூரமான கொலையை செய்திருக்கிறது காவல் துறை. அரசாங்கத்தில் ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் ஒவ்வாரு அரசு துறை மட்டத்திலும் அதிகாரிகள் லாபி இருந்து வருகிறது. இவர்களுக்கு கீழ்தான் எந்த கட்சியும் ஆட்சி நடத்த முடியும். அதனால்தான், எந்த சம்பவமாக இருந்தாலும் உயர் அதிகாரிகளை அரசாங்கம் கைவைப்பதில்லை. இதற்கு பதிலாக கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்கள் மீது பழியை போட்டு தப்பித்துக் கொள்கின்றனர்.

**ஜெய்பீம் படத்தில் வரும் மிளகாய் பொடி**

ஜெய்பீம் – படத்தில் திருட்டு வழக்கில் அப்பாவி இளைஞனை ஒத்துக்க வைக்க கடுமையான தாக்குதலை காவல் நிலையத்தில் போலீஸார் நடத்துவார்கள். அப்போது பேச்சுமூச்சு இல்லாமல் கிடக்கும் இளைஞன் கண்ணில் மிளகாய் பொடியை தூவி உயிருடன் இருக்கிறானா இல்லையா என சோதிப்பார்கள். அதேபோன்ற கொடூரத்தை அஜித்குமார் கொலையிலும் செய்திருக்கிறது காவல்துறை. அஜித்குமார் தாகத்துக்கு தண்ணீர் கேட்டபோது அதில் மிளகாய் பொடியை தூவிக் கொடுத்து, இந்த படுபாதக செயலில் ஈடுபட்டுள்ளது. மேலதிகாரிகளின் உத்தரவுக்கு இணங்க ஒன்பதரை பவுன் நகை திருட்டு வழக்கில் இவ்வளவு பயங்கரத்தை கக்கிய காவல் துறை, பல கோடி ரூபாய் திருட்டு, மோசடி மற்றும் கொலை வழக்குகளிலும் இதே பயங்கரத்தைக் காட்டுமா என்பது மில்லியன் டாலர் கேள்வி.

# நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவை

## சிக்க வைத்த கொக்கைன்



- தமிழ் திரையுலகத்தை மிரள வைத்த சம்பவம்
- போதைப்பொருள் வளையத்துக்குள் மாட்டிய நடிகர்கள்
- அதிமுக நிர்வாகி தொடங்கி நடிகர்கள் வரை
- நட்சத்திர ஓட்டல்களில் புழங்கும் உயர் ரக போதைப்பொருள்
- பார்ட்டிகளில் கட்டாயம் இடம்பிடிக்கும் போதைப்பொருள்






# சினிமா பார்ட்டிகளில் புழங்கும் போதை வஸ்து

திரை உலகில் பார்ட்டிகள் என்பது கலாச்சாரமாக இருந்து வருகிறது. திரையுலகில் வளர்ந்துவிட்ட நடிகர், நடிகை,அந்த இடத்தை தக்க வைக்க நட்சத்திர ஓட்டல்களில் பார்ட்டிகள் வைப்பது வழக்கம். இதில் தங்களுக்கு சாதகமான தயாரிப்பாளர்கள், இயக்குனர்கள், நடிகர், நடிகைகளை வரவழைத்து மகிழ்வார்கள். இதன்மூலம் அவர்களுக்கு அடுத்தடுத்து சினிமாவில் வாய்ப்பு கிடைக்கும். இவர்கள் குழுவாக செயல்பட்டு தங்களுக்குள் வாய்ப்புகளை வழங்குவதும், பெற்றுத்தருவதுமாக இருப்பர். இந்தப் பார்ட்டிகளில் போதைப் பொருள் அங்கம் வகிப்பது கட்டாயம்.



தமிழ் திரையுலகை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய நாளாக அமைந்துவிட்டது கடந்த ஜுன் 23ம் தேதி. 20 ஆண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் கோலோச்சி வரும் நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்ட சம்பவம் தான் அன்றைய தினத்தை பரபரப்பாக்கியது. கொக்கைன் போதைப் பொருளை அவர் பயன்படுத்தியதால் கைது செய்யப்பட்டதா போலீஸ் தரப்பில் விளக்கம் கொடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சென்னை நுங்கம்பாக்கம் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட ஸ்ரீகாந்திடம் போலீஸார் 4 மணி நேரம் விசாரணை நடத்தினர். மேலும் அவரது வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது.

போதைப்பொருள் எதுவும் சிக்காத நிலையில், அவரை அழைத்துக் கொண்டு அரசு மருத்துவமனையில் நடத்தப்பட்ட ரத்த பரிசோதனையில் கொக்கைன் பயன்பாடு உறுதியானது. இதன்பின் தான் நடிகர் ஸ்ரீகாந்த் அதிரடியாக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

கொக்கைன் பயன்பாடு தொடர்பாக போலீஸ் வலையில் சிக்கிய அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு முன்னாள் நிர்வாகி பிரசாத் மூலம் நடிகர் ஸ்ரீகாந்த் மாட்டினார். சினிமா தயாரிப்பாளரான பிரசாத் தயாரிக்கும் தீங்கிரை படத்தில் கதாநாயகனாக ஸ்ரீகாந்த் நடித்தார். அந்தப் பழக்கத்தில் கொக்கைன் பாதைக்கு பின்னாளில் ஸ்ரீகாந்த் அடிமையாகி உள்ளார். தொடர்ந்து ஆன்லைனிலும், டீலர் மூலமாகவும் நான்கு லட்சம் ரூபாய் வரை கொடுத்து கொக்கைன் வாங்கி உள்ளார்.

இவரை அடுத்து நடிகர் கிருஷ்ணாவும், போதை பொருள் வலையில் சிக்கினார். ஆனால் அவரிடம் நடத்தப்பட்ட ரத்த பரிசோதனையில் கொக்கைன் பயன்பாடு உறுதி செய்யப்படவில்லை. இருந்தாலும் போதைப் பொருள் கும்பலிடம் அவர் தொடர்பில் இருந்தாக கைது செய்யப்பட்டார். தமிழ் திரை உலகில் அடுத்தடுத்து இரண்டு பெரிய நடிகர்கள் கைது செய்யப்பட்டது திரை உலகில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.




# முருகன் மாநாடு
# குலுங்கிய மதுரை

- **10 லட்சம் பேர் திரண்டதால் மிரண்ட கட்சிகள்**
- **அறுபடை வீட்டை கண்முன் நிறுத்திய அதிசயம்**
- **எங்கும் முழங்கிய அராகரா அராகரா முழக்கம்**
- **1 லட்சம் பேர் திரண்டு பாடிய கந்தசஷ்டி கவசம்**

மதுரையில் 10 லட்சத்துக்கும் அதிகமானார் சங்கமித்த முருகர் மாநாடு, தமிழக அரசியலில் பெரும் புயலைக் கிளப்பியது. மாநாட்டை நடத்த தடை கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நிலையிலும், அரசியல் பேசக்கூடாது என்ற 56 நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியதால் மாநாட்டு வேலைகள் களைகட்டியது. மாட்டுத்தாவணி அருகே உள்ள அம்மா திடலில் மாநாட்டு முகப்பில் முருகனின் அறுபடை வீடுகளையும் த்தரூபமாக செதுக்கி வைக்கப்பட்டதால், பக்தர்கள் குடும்பம் குடும்பமாக வந்து முருகனை வணங்கிச் சென்றனர்.

மாநாட்டுக்கு உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோர் வருவதாக அறிவித்ததும், புளியை கரைத்தது திமுக கூட்டணி கட்சிகளுக்கு. மத நல்லிணக்கத்தை கெடுத்து, கலவரம் ஏற்படுத்த முருகர் பெயரில் மாநாடு நடத்துவதாக மார்க்சிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியும் கூவின. ஆனாலும் மாநாட்டு அரங்கு 10 லட்சம் பேர் கூடும் வகையில் பிரமாண்டமாக அமைக்கப்படிருந்தன.

ஜூன் 22ம் தேதி மாநாடு நடந்த நாளில் மதுரை மாநகரமே பக்தர்கள் கூட்டத்தால் குலுங்கியது. தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலம், வெளிநாடுகளில் இருந்தும் சாரை சாரையாக பக்தர்கள் குவிந்தனர். முருக பக்தர்கள் காவடி எடுத்தும், மயிலாட்டம் ஆடியும், வேல் குத்தியும் மாநாட்டு திடலுக்கு திரண்டதால் அங்கு பக்திமணம் வீசியது. பெரும்பாலான பக்தர்கள், காவி, பச்சை கலர் வேட்டி அணிந்து மாநாட்டில் குடும்ப சகிதமாக கலந்துகொண்டனர். கூட்டத்தில் அத்தனை ஒழுங்கும் நேர்த்தியும் இருந்தது. சுமார் 2000 இந்து முன்னணி தன்னார்வலர்கள் பக்தர்களை வழிநடத்தினர். 10 லட்சம் பேர் திரண்ட நிகழ்வில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காத வண்ணம் கட்டுக்கோப்பாக பக்தர்களின் ஆதரவோடு மாநாடு நடந்தேறியது.

மாநாட்டில் பேசிய ஆந்திர முதல்வர் பவன் கல்யாண், இந்து மதத்தை இழிவுபடுத்துவர்களை பார்த்து சும்மா இருக்க மாட்டோம் என்றும், இந்து மதத்தை காக்க அணிதிரள்வோம் என்றும் சூளுரைத்த போது அரங்கமே அதிர்ந்தது. அண்ணாமலை பேசும்போது, இந்துக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.



### 10 லட்சம் பேர் திரண்டதால் ஸ்தம்பித்த மதுரை

மதுரை முருகர் மாநாட்டில் 10 லட்சத்துக்கும் அதிமானோர் திரண்டதால் மாநாட்டு திடல் நிரம்பியதாடு, மாநாட்டுக்கு வர முடியாமல் ஏராளமானார் ஆங்காங்கே தவித்த காட்சிகளை பார்க்க முடிந்தது. மாநாட்டு திடலை சுற்றிலும் சுமார் 5 கிலோ மீட்டர் சுற்றளவில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. மாநாடு சிறப்பாக நடக்கக் கூடாது என்பதற்காக குறைந்த எண்ணிக்கையிலேயே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. 10 லட்சம் பேர் திரளும் இடத்தில் 1500 போலீஸார் தான் பாதுகாப்புக்காக இருந்தனர்.

### முதலிடம் பிடித்த மாநாடு

இந்து முன்னணி அமைப்பு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநாடு நடத்துவதை வழக்கமாக கொண்டுள்ளது. ஏதாவது ஒரு பெயரில் நடத்தப்படும் மாநாடு இந்த ஆண்டு மதுரையில் குன்றம்காக்க கோயில் காக்க எனும் தலைப்பில் நடந்தது. தமிழ்க் கடவுள் முருகனாக இருப்பதாலும், முருகனின் அறுபடை வீடுகளும் தமிழகத்திலேயே அமைந்திருப்பதாலும் ஆன்மிகம் மட்டுமில்லாமல் தமிழர்களின் பாரம்பரியம்,பண்பாட்டை முன்னிறுத்தும் வகையிலும் மாநாடு நடந்து முடிந்தது. மாநாட்டில் சுமார் 70 சதவீதத்துக்கும் அதிகமாக பங்கேற்றது இளைஞர்கள் தான்.

### சர்ச்சையை கிளப்பிய பெரியார், அண்ணா காணொலி

முருகர் மாநாட்டில் அதர்மம் ஒழிக என ஒளிபரப்பப்பட்ட வீடியோவில், பெரியார், அண்ணா படங்கள் இடம்பெற்றிருந்தன. இது பாஜக கூட்டணியில் இடம்பெற்றிருந்த அதிமுகவுக்கு பிரச்சினையை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டில் பங்கேற்ற அதிமுக முன்னாள் அமைச்சர்களான செல்லூர் ராஜூ, ஆர்.பி. உதயகுமார், கடம்பூர் ராஜூ ஆகியார் இது போன்ற நிகழ்வு நடக்கும் என்று தங்களுக்கு தெரியாது என கூறி சமாளித்தனர். இந்த விஷயத்தை திமுகவும், திராவிடம் பேசும் அரசியல் தலைவர்களும் வன்மையாக கண்டித்தனர்.

### அடுத்து திருவண்ணாமலை, திருச்சி, ராமேஸ்வரம்...

மதுரையில் முருகர் மாநாடு, பாஜக, இந்து முன்னணி அமைப்புக்கு பெரிய அளவில் வலுசேர்த்து இருப்பதால் இது வரும் சட்டமன்ற தேர்தலில் ஓட்டுக்களாக மாற வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து திருவண்ணாமலையில் அண்ணாமலையார் மாநாடு, திருச்சியில் திருவரங்க பெருமான் மாநாடு, ராமேஸ்வரத்தில் ராமநாத சுவாமி மாநாடு நடந்தால் தமிழகத்தை ஆன்மிக பூமியாக மாற்றி விடலாம் என அடுத்த பாய்ச்சலுக்கு தயாராகி விட்டது இந்து முன்னணி. திராவிட கட்சிகளுக்கு இந்த சேதி மேலும் வியப்படைய செய்துள்ளது.



MARUTI SUZUKI SERVICE

CRESCO CARS

# ONE DAY EXCLUSIVE OFFER
# ON PERIODIC MAINTENANCE SERVICE

LABOUR DISCOUNT 15%

Free Water Washing

Free Pick Up Drop FREE



QUICK SERVICE

100 % CUSTOMER SATISFACTION

EXPERT TECHNICIAN

GENUINE SPARE PARTS



CONTACT : 91763 42864

PALLAIKARANI | MMDA | AMBATTUR
THIRUMULLAIVOYAL | KELAMBAKKAM

# விஜய் கட்சியின் அரசியல் வியூகம்

**சாதிக்க நினைக்கும் விஜய்- பிரபலம் இல்லாத நிர்வாகிகள்**

## விஜயை மட்டும் நம்பினால் என்ன ஆகும்?



தமிழக அரசியலில் மல்லுக்கட்டும் கட்சிகளுக்கு மத்தியில் புதிய வரவு தமிழக வெற்றிக் கழகம். தமிழ் திரையுலகில் உச்சபட்ச நடிகராக வலம் வரும் விஜய், திடீரென கட்சி துவக்கி, கொள்கை அறிமுக கூட்டத்தை விக்கிரவாண்டியில் மிக பிரமாண்டமாக நடித்தி, அரசியல் கட்சிகளுக்கு புளியை கரைத்தார். தொடர்ந்து செயற்குழு கூட்டத்தை சென்னையில் நடத்தி அதிரடி காட்டி மத்தியில் ஆளும் பாஜக, தமிழகத்தை ஆளும் திமுகவுக்கு எதிராக சூடான விமர்சனங்களை முன்வைத்தார். திமுகவை பாயாசம் என்றும், பாஜகவை பாசிசம் என்றும் அவர் பேசிய பஞ்ச் டயலாக் இன்னும் பேசு பொருளாக உள்ளது.

தவெக செயற்குழு கூட்டத்தில் பேசிய விஜய், தமிழகத்தில் திமுக, த.வெ.க என இரண்டு கட்சிகளுக்கு இடையே தான் போட்டி என அறிவித்தார். த.வெ.க. தலைமையிலான கூட்டணிக்கு வர கட்சிகளுக்கு விஜய் அழைப்பு விடுத்தார், அவர் அழைத்து கிட்டத்தட்ட 10 மாதங்களைக் கடந்தும் இதுவரை எந்தக் கட்சியும் விஜய் கூட்டணிக்கு செல்லவில்லை. அதிமுகவை பெரிதும் எதிர்பார்த்த விஜய் கட்சி, முதல்வர் பதவி அதிமுகவுக்கும், துணை முதல்வர் பதவி த.வெ.க.வுக்கும் என துண்டைப் போட்டுக் பார்த்தும் வேலை நடக்கவில்லை,

அதிமுகவை பொறுத்தவரை நம் மீது குதிரை செய்து ஆட்சி அதிகாரத்துக்கு எவரும் வந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளது. அதே பாணியைதான் திமுகவும் காலம் காலமாக கொண்டு தங்களை மட்டுமே அதிகார மையங்களாக முன்னிலைப்படுத்தி வருகின்றன. அதனால் விஜய், தனித்தே

களம் காண வேண்டிய கட்டாயம் உருவாக்கப்பட்டுள்ளது. தனித்து நின்றால் சீமானைப் போல் ஓட்டுக்களை பிரிக்க முடியும். இதனால் விஜய்க்கு பலன் இல்லை என்றாலும், அவரது அரசியல் எதிர்காலத்துக்கு பிள்ளையார் சுழி. எத்தனை சதவீத வாக்குகளை பெறுகிறாரோ, அதுவே தமிழகம் மற்றும் தேசிய அரசியல் களத்தில் அந்தக்கட்சியின் பாதையை தீர்மானிக்கும்.

விஜய் கட்சிக்கு பெரிய ஆயுதமே இளம் தலைமுறையினரும், இளம் பெண்களும், தாய்மார்களுமே. குறைந்தது ஒரு வீட்டில் ஒரு ஓட்டாவது விஜய் கட்சிக்கு உறுதியாகிவிட்டது நிச்சயம். அப்படி பார்த்தால் ஐந்தரை கோடி வாக்காளர்களில் குறைந்தபட்சம் நான்காக வகுத்துப் பார்த்தால் அவரது கட்சி ஒரு கோடிக்கும் அதிகமாக வாக்குகளை தக்கவைப்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதன்மூலம் த.வெ.க. திமுக, அதிமுகவுக்கு அடுத்து மூன்றாவது இடத்தைப் பிடிப்பது நிதர்சனம்.

விஜய் கட்சி திமுகவை தவிர்த்து அதிமுக, விசிக, தேமுதிக, காங்கிரஸ், மதிமுக உள்ளிட்ட கட்சிகளுக்கு கூட்டணி ஆட்சிக்கும், துணை முதல்வர், அமைச்சர் பதவி என பல்வேறு வாக்குறுதிகளை வழங்கினாலும், செவிசாய்க்க இந்தக் கட்சிகள் மறுக்கின்றன. அதேநேரம் ஆளும் திமுக அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளை தக்கவைக்க பலவிதமான பிரயத்தனம் செய்து வருகிறது. விசிக, மதிமுக உள்ளிட்டவை வரும் தேர்தலில் கூடுதல் தொகுதிகளை கேட்டுப் பெறுவது என்பதில் உறுதியாக உள்ளன. இது திமுகவுக்கு பின்னடைவாகவே இருக்கும். தேர்தல் நெருங்கும் வேளையில் இக்கட்சிகள் வைக்கும் டிமாண்டுக்கு கட்டுப்பட்டே ஆக வேண்டிய தலையை பிய்த்துக் கொள்ளும் நிலையில்தான் திமுக உள்ளது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சியை பிடித்த திமுகவுக்கு வரும் 2026 சட்டப்பேரவை தேர்தல்





பெரும் சிக்கலை தான் உருவாக்கி இருக்கிறது. ஒருபுறம் அதிமுக தலைமையிலான பாஜகவின் விஷ்வரூபத்தையும், மறுபுறம் விஜயின் அரசியல் வியூகத்தையும் சமாளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது திமுக. இந்த இடியாப்ப சிக்கலில் விஜயின் அரசியல் களம் என்ன மாதிரியான விளைவை ஏற்படுத்தப் போகிறது என்பதை அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தல் முடிவில் விடை நிச்சயம்.

### முதல்வர் வேட்பாளர் விஜய்

த.வெ.க. செயற்குழு கூட்டம் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடந்தது.இதில் முக்கியமாக விஜயை, முதல்வர் வேட்பாளராக கட்சியினர் முன்மொழிந்துள்ளனர். மேலும் திமுக, பாஜகவுடன் கூட்டணி கிடையாது என உறுதியாக தெரிவித்தார் விஜய். எங்கள் தலைமையில் தான்கூட்டணி அமையும் என்ற அவர், கூனிக் குழைந்து கூட்டணிக்கு செல்ல நாங்கள் திமுகவோ, அதிமுகவோ இல்லை என்றும் திட்டவட்டமாக முழங்கினார்.

### செப்டம்பர் முதல் விஜய் சுற்றுப்பயணம்

த.வெ.க. தலைவர் விஜய், வரும் செப்டம்பர் முதல் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செல்ல முடிவெடுத்துள்ளார். தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ளதால் தற்போதே களத்தை தயார்படுத்த முடிவு செய்து, அதற்கான திட்டமிடலில் அக்கட்சி இறங்கி உள்ளது. கடந்த நான்கு ஆண்டுகால திமுக ஆட்சியில் நிறைவேற்றப்படாத திட்டங்கள், தேர்தல் அறிக்கையில் கூறியபடி செய்து முடிக்காத, கிடப்பில் போடப்பட்ட விஷயங்கள், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, குடும்ப ஆட்சி என திமுக அரசை திணறடிக்கும் வகையிலான பிரசார யுக்தியை தயாரிக்கும் பணியில் அக்கட்சி இறங்கி உள்ளது.

### யார் அந்த புஸ்ஸி ஆனந்த்

விஜய் கட்சியில் உள்ள பொதுச்செயலாளர் ஆனந்த், புதுச்சேரியை சேர்ந்தவர். விஜய் ரசிகர் மன்றத்தில் ஆரம்பத்தில் இருந்து பயணித்தவர். புதுச்சேரி மாநிலத்தில் புஸ்ஸி எனும் தொகுதியில் போட்டியிட்டு ஒருமுறை வெற்றி பெற்றவர். விஜய்க்கு மிகவும் நம்பகமான நபராக இருப்பதால் அக்கட்சியின் மிகவும் உயர்ந்த பதவியான பொதுச்செயலாளர் பதவி வழங்கி கௌரவித்துள்ளார் விஜய். அவருக்கு மேடையில் எதுகை மோனையில் பேசத் தெரியாது. இருந்தாலும் தமிழகம் முழுவதும் மாவட்ட செயலாளர்கள் நியமனம் துவங்கி, அடிமட்ட நிர்வாகிகள் வரை நியமனம் செய்யும் அனைத்து அதிகாரமும் அவரிடமே உள்ளது.

### பிரபலம் இல்லாத கட்சி நிர்வாகிகள்


விஜய் கட்சியில் ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள்ளிட்டார் மட்டுமே ஓரளவு தெரிந்த முகங்கள். ஆதவ் அர்ஜுனாவை பொறுத்தமட்டில் ஆரம்பத்தில் திமுக, ஐடி விங்கிலும், பின்னர் அதிமுக, அடுத்து விசிகவில் துணை பொதுச்செயலாளர், பின்னர் அங்கிருந்து விஜய்கட்சி என தாவலில் கெட்டிக்காரர். மேடையிலும், பொதுவெளியிலும் உணர்ச்சிகரமாக பேசிவிட்டு, அதற்கான எதிர்வினையை அனுபவிப்பவர். நிர்மல்குமாரை பொறுத்தமட்டில் அதிமுக ஐ.டிவிங்கில் இருந்து வந்தவர். இவர் பெரிய அளவில் பிரபலம் கிடையாது.



### பாஜகவின் பி டீமா விஜய் கட்சி

பாஜகவை பொறுத்தமட்டில் தான் ஆட்சியை பிடிக்காவிட்டாலும் தனது எதிர்க்கட்சியை ஆட்சியை பிடிக்க விடாமல் காய் நகர்த்துவதில் கைதேர்ந்தது. இதற்கு உதாரணமாக ஒவைசியை தனது துருப்புச் சீட்டாக அதாவது தனியாக நிற்க வைத்து, ஓட்டுக்களை பிரித்து, அதன்மூலம் எதிர்க்கட்சியை திணறடிக்கும் வேலை செய்கிறது. அந்தப் பாணியில் தமிழகத்திலும் விஜய்-யை எந்த அணியிலும் சேர விடாமல் தடுப்பதன் மூலம் ஓட்டுகளை பிரித்து ஆளும் கட்சியை மீண்டும் ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்து விடலாம் என்ற சூட்சுமத்தை கையில் எடுத்துள்ளது. விஜய், ஓட்டுகளை பிரிப்பதால் திமுகவை விட அதிமுகவுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால், பாஜக அந்த அணியில் இருப்பதால் இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஓட்டுகளை விஜய் தன் வசம் இழுக்கும்பட்சத்தில் அது, இவர்களை முழுமையாக நம்பியுள்ள திமுகவுக்கும் பெரும் சறுக்கலாக அமையும். ஆனால் இதுவே அதிமுக- பாஜக கூட்டணிக்கு பலமாக அமைய வாய்ப்பு இருப்பதாக,அரசியல் கணக்குகள் சொல்கின்றன. இதன்மூலம் பாஜகவின் பி டீம் த.வெ.க.வா எனும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றன.

# அகமதாபாத் விமான விபத்து பயங்கரம்



- **271 பேர் பலியான சோகம்- ஒருவர் மட்டும் தப்பிய அதிசயம்**
- **கனவுகளை சுமந்து சென்றவர்கள் கருகிய கோரம்**
- **விமானத்தில் 241 பேர் — மீதி தரையில் இருந்தவர்கள்**
- **புறப்பட்ட 30 விநாடிகளில் புதைந்த ஆத்மாக்கள்**

ஜூன் 12ம் தேதி நாட்டையை உலுக்கிய சம்பவம் நிகழ்ந்தது. குஜராத் மாநிலம் அகமதாபாத் விமான நிலையத்தில் இருந்து 242 பேருடன் புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் 787-8 ட்ரீம் லைனர் விமானம், 30 விநாடிகளில் வெடித்துச் சிதறியதுதான் அனைவரையும் கலங்கச் செய்தது.

பிற்பகல் 1.38 மணிக்கு புறப்பட்ட விமானம், மேல் எழும்பிய கொஞ்ச நேரத்தில் மேலே செல்ல முடியாமல் அருகில் இருந்த கட்டிடங்கள் மேல் பயணித்து, திடீரென, மேகனிநகர் பகுதியில் பி.ஜே. மருத்துவக்கல்லூரி மருத்துவ மாணவர்களின் விடுதி கட்டிடத்தின் மீது விழுந்து சுக்குநூறாக நொறுங்கியது.

அப்போது ஏற்பட்ட தீப்பிழம்புகள், அணுகுண்டு வெடித்தால் ஏற்படும் அசாதாரண நிலையை கண்முன் நிறுத்தியது. இந்தக்காட்சிகளை, அருகே வீட்டின் மொட்டை மாடியில் நின்றிருந்த சிறுவன், மொபைல் போனில் பதிவு செய்துள்ளான். சிறுவனின் வீடியோ தான் உலகம் முழுவதும் ஊடகங்களில் வெளியாகி அனைவரையும் உறையச் செய்தது.



ரமேஸ் விஸ்வகுமார்

விபத்துக்குள்ளான விமானத்தில் சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள் என மொத்தம் 230 பயணிகளும், கேப்டன் சுமித் சபர்வால், துணை விமானி கிளைவ் குந்தர் மற்றும் 10 விமான பணியாளர்கள் இருந்தனர். பயணிகளில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர்கள். 7 பேர் போர்த்துக்கீசியர்கள், ஒருவர் கனடா நாட்டை சேர்ந்தவர். விமானம் ஒன்பதரை மணி நேரம் தொடர்ந்து பயணித்து லண்டன் செல்லும் என்பதால் ஒரு லட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பெட்ரோல் நிரப்பப்பட்டு இருந்தது. விமானம் மோதியவுடன் வெடித்து சிதறி தீப்பிழம்பு வானை முட்டும் அளவுக்கு இருந்ததற்கு இதுவே காரணமானது.

கண் இமைக்கும் நேரத்தில் விமானத்தில் இருந்து அத்தனை உயிர்களும் கரிகட்டையாகிப் போன அந்த ரணமான காட்சிகள் இன்னும் மனதை உலுக்குகின்றன. விமானத்தில் பயணித்த அத்தனை பேரும் எத்தனையோ கனவுகளை சுமந்து கொண்டு புறப்பட்ட, சில நொடிகளில் மரணத்தின் வாசலுக்கு செல்வோம் என எதிர்பார்த்து இருப்பார்களா என்ன. அத்தனை சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது அகமதாபாத் விமான விபத்து.

### விஜய் ரூபானியின் அதிர்ஷ்ட எண்ணும், மரணமும்

விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானியும் பலியானவர்களில் ஒருவர். லண்டனில் உள்ள தனது மகளை பாப்பதற்காக விமானத்தில் ஏறியவரின் உயிர், அப்படியே விண்ணிலேயே சென்றுவிட்டது. அவரது அதிர்ஷ்ட எண் 1206- இதையே தனது அனைத்து வாகனங்களின் எண்ணாகவும் அவர் பயன்படுத்தி வந்தார். விபத்து நடந்த தினமும் 12-06-25 என்பதால் அதிர்ஷ்ட எண்ணே அவரது இறுதி நாளாகவும் அமைந்துவிட்டது பெரும் சோகம்.

### உயிர் தப்பிய அதிசய பிறவி

விமானத்தில் 11ஏ இருக்கையில் பயணித்த ரமேஸ் விஸ்வகுமார், என்பவர் மட்டும் அவசர வழியில் இருந்து தப்பித்ததாக தெரிவித்தார். விமானம், மருத்துவக் கல்லூரி விடுதி கட்டிடத்திற்குள் விழுந்து கரும்புகையுடன் வெடித்து சிதறிய காட்சிகளை பார்த்துக் கொண்டிருந்த நமக்கு, விடுதி கேட்டை திறந்து ஒருவர் மட்டும் சிறு காயங்களுடன் சர்வ சாதாரணமாக வந்ததை பார்த்து அதிர்ச்சி. கையில் மொபைல் போனுடன் வந்த அவரிடம் அங்கிருந்தவர்கள் விசாரித்த போது, தான் விமானத்தில் இருந்து தப்பி வந்ததாக கூறி அனைவரையும் ஆச்சரியதில் உறைய வைத்தார். லண்டனில் 20 ஆண்டுகளாக வசித்து வருவதாக கூறும் அவர், எப்படி தப்பித்தார் என்பது இதுவரை புரியாத புதிர்.

### டாடா குழுமம் தலா ரூ.1 கோடி நிவாரணம்

ஏர் இந்தியாவை நடத்தி வரும் டாடா குழுமம், விபத்து நிகழ்ந்தவுடன் கடும் அதிர்ச்சி அடைந்தது. இந்த வேதனையான தருணத்தில் துயரத்தை வெளிப்படுத்த தங்களிடம் வார்த்தைகள் இல்லை என குழும தலைவர் சந்திரசேகர் தெரிவித்தார். மேலும் உயிரிழந்த அனைவருக்கும் தலா 1 கோடி ரூபாய் நிவாரணம், காயமடைந்தவர்களின் முழு மருத்துவச் செலவுகளை ஏற்பதாகவும் அறிவித்தார்.



சேதமடைந்த பிஜி மருத்துவக் கல்லூரி மாணவர்களின் விடுதியை சீரமைத்து தருவதாகவும் உறுதி அளித்தார்.

### கறுப்பு பெட்டி ரகசியம் - விமானி- துணை விமானி பேச்சால் சர்ச்சை

விமானத்தில் இரண்டு கருப்பு பெட்டிகள் இருக்கிறது. அவை விமானத்தின் மின்னணு தகவல் ரெக்கார்டர். விமான அறையில் இருந்து அவை ஒலியை பதிவு செய்யும். என்ஜின் செயல்பாடு, பைலட் கட்டுப்பாடு, திசை ஆகியவற்றை பதிவு செய்யும். மேலும் பைலட்டுகள் பேசும் வார்த்தைகள், விமான ஊழியர்களின் உரையாடல்கள், எச்சரிக்கை ஒலி,அசாதாரண சத்தம், விமானம் பயணிக்கும் வேகம் உள்ளிட்டவற்றை பதிவு செய்யும். இதன்மூலம் விமான விபத்துக்கான காரணத்தை அறிந்து கொள்ள முடியும். அகமதாபாத் விமான விபத்தில் சிக்கிய இரண்டு கறுப்பு பெட்டிகளில் ஒன்று பெரும் சேதம் அடைந்ததால் மற்றொன்று சோதனைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் முடிவில் விமானம் மேலே எழும்பும்போது இன்ஜினுக்கு செல்லும் பெட்ரோல் விநியோக ஸ்விட்சை துணை விமானி நிறுத்தியதாகவும், ஏன் நிறுத்தினாய் என, விமானி கேட்டதாகவும், உரையாடல் பதிவு இருப்பதாக தகவல் வெளியாகி அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

### இந்தியாவில் விமான விபத்துக்கள்- முக்கியமானவை

1978 ஜனவரி 1, மும்பையில் இருந்து துபாய் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியா விமானம், புறப்பட்ட சிறிது நேரத்தில் அரபிக்கடலில் விழுந்தது. இதில் பயணித்த 213 பேரும் உயிரிழந்தனர்.

1982 ஜூன் 21, மலேசியாவில் இருந்து மும்பை வந்த ஏர் இந்தியா போயிங் 403 விமானம், தரையிறங்கும் போது விபத்தில் சிக்கியது. பயணித்த 111 பேரில் 17 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

1988 அக்டோபர் 19, மும்பையில் இருந்து அகமதாபாத் சென்ற இந்தியன் ஏர்லைன்ஸ் போயிங் 113 ரக விமானம், விமான நிலையம் அருகே விபத்தில் சிக்கியது. இதில் 135 பேர் பயணித்த நிலையில் 133 பேர் உயிரிழந்தனர்.

1990 பிப்ரவரி 14, மும்பையில் இருந்து பெங்களூரு நோக்கி பயணித்த இந்தியன் ஏர்லைன்ஸ் 605 ஏர்பஸ் விமானம், பெங்களூருவை நெருங்கும் போது விபத்துக்குள்ளானது.- இதில் பயணித்த 146 பேரில் 92 பேர் உயிரிழந்தனர்.

1996 நவம்பர் 12, சவுதி அரேபியா போயிங் விமானமும், கஜகஸ்தான் விமானமும் டெல்லி அருகே நடுவானில் பயங்கரமாக மோதிக் கொண்டது. இதில் இரண்டு விமானங்களிலும் பயணித்த 312 பேரும் உயிரிழந்தனர்.

2010 மே 22, துபாயில் இருந்து கர்நாடகா மாநிலம் மங்களூரு நோக்கி வந்த ஏர் இந்தியா போயிங் 812 விமானம், தரையிறங்கும்போது விபத்தை சந்தித்தது. இதில் பயணித்த 166 பேரில் 152 பேர் உயிரிழந்தனர்.

# அண்ணாமலை

## புலி பதுங்குவது பாய்வதற்கா?



- தமிழக அரசியலை புரட்டிப்போட்டவர்
- பாஜகவின் உயர் பொறுப்பை ஏற்க தயாராகி வருகிறார்
- அதிரடி பேச்சால் திமுக, அதிமுகவை சிதறடித்தார்
- பாஜக வாக்கு வங்கியை 11 சதவீதமாக உயர்த்தினார்

பேரக் கேட்டாலே சும்மா அதிருதுல்ல- என படத்தில் ரஜினி பேசும் வசனம் போல, அண்ணாமலை பேர கேட்டாலே தமிழ்நாட்டில் திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகளை கடந்த 4 ஆண்டாக ஜுரம் வந்துவிடும் அளவுக்கு தனது அதிரடி பேச்சால் திகைக்க வைத்தார்.

கரூர் மாவட்டம் சின்னதாராபுரம் பகுதியில் தொட்டம்பட்டி எனும் சிறு கிராமத்தில் விவசாயியின் மகனாக பிறந்த அண்ணாமலை, படித்து பட்டம் பெற்று, ஐபிஎஸ் தேர்வில் வெற்றி பெற்று கர்நாடகாவில் காவல்துறை அதிகாரியாக 2011ம் ஆண்டு பணியில் சேர்ந்தார். தொடர்ந்து 9 ஆண்டுகள் பணியாற்றிவிட்டு, அரசியலுக்குள் நுழைந்து சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் பதவியை ராஜினாமா செய்துவிட்டு 2020ம் ஆண்டு பாஜக கட்சியில் சேர்ந்தார்.

தனது நேர்த்தியான பேச்சு, செயல்பாடு காரணமாக, 2021ம் ஆண்டு தமிழக பாஜக தலைவராக அரியணை ஏறினார். பாஜக தலைவராக பதவி ஏற்ற நாள் முதல் தமிழகம் முழுவதும் கட்சியை கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டார். நிர்வாகிகள், தொண்டர்களை நேரடியாக சந்தித்து, கட்சி வளர்ச்சிக்கான அனைத்துவிதமான முன்னெடுப்புகளையும் திறம்பட செய்தார். ஆளும் திமுக அரசு மீது கடுமையான விமர்சனங்களை தொடர்ந்து தெரிவித்து வந்தார். நேருக்கு நேராக விவாதிக்கத் தயாரா என்பது போன்ற அண்ணாமலையின் அதிரடி கேள்விகளுக்கு பதில் கொடுக்க முடியாமல் திமுக திணறியது.

ஆளும் கட்சியை மட்டுமில்லாமல் அதிமுகவையும் தனது கருத்துக்களால் கோபமடையச் செய்தார். இவை எல்லாம் கட்சி ரீதியாக எதிரான விஷயங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டாலும் இளைஞர்கள், இளம்பெண்கள், தாய்மார்கள் மத்தியில் அண்ணாமலை ஹீரோவாக உயர்ந்து நின்றார்.

திமுக அரசுக்கு, எதிர்க்கட்சியான அதிமுகவை விட அண்ணாமலையே சிம்ம சொப்பணமாக இருந்தார்.

அதேநேரம், அண்ணாமலையின் செயல்பாடுகள் கடுமையான விமர்சனங்களையும் சந்தித்தது.

ரஃபேல் வாட்ச், விமானத்தின் அவசர கதவை திறந்த விவகாரம், சாட்டையால் அடித்து கொண்டது, செருப்பு அணிய மாட்டேன் என்று சவால்விட்டது போன்றவை எதிர்க்கட்சிகளால் கிண்டலுக்கும் உள்ளானது. அதேபோல் எந்த தலைவருடன் அண்ணாமலை நட்பு பாராட்டாமல் இருந்தது, அவருக்கான பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

தற்போதும் அண்ணாமலைக்கான இமேஜ் சற்றும் குறையாமல் இருப்பது தமிழக அரசியலில் புதிய ரத்தத்தை அவர் பாய்ச்சியது தான். 50

## மனங்களை தொட்ட என் மண் என் மக்கள் யாத்திரை

நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக அண்ணாமலை முன்னெடுத்த என் மண் என் மக்கள் யாத்திரை, பாஜக வளர்ச்சிக்கு வித்திட்ட முக்கிய காரணி. மக்களை நேரடியாக சந்தித்து, அவர்களது குறைகளை கேட்டறிந்த பாங்கு, திராவிட கட்சிகளை புருவம் உயர்த்தச் செய்தது. பாஜகவில் எல்.முருகனின் வேல் யாத்திரை பாணியை போல், அண்ணாமலையின் யாத்திரையும் பலரது நெஞ்சங்களை தொட்டது.



ஆண்டுகாலமாக திராவிட கட்சிகள் ஆண்டாலும், தொடர்ந்து நீடிக்கும் மக்கள் பிரச்சினைகளை கையில் எடுத்து அரசியல் பேசியது இளம் தலைமுறையை அவர் பக்கம் இழுக்க காரணமாயிற்று.

தலைவர் பதவியை விட்டு விலகி இருந்தாலும், சமூக வலைதளங்கள் மூலமாகவும், நேரடியாகவும் தனது அதேபாணி அரசியலை முன்னெடுத்து வருகிறார்.





### வாக்கு வங்கியை உயர்த்தி சாதனை படைத்தவர்

அண்ணாமலை தலைவராக பதவி ஏற்பதற்கு முன்பு அதாவது 2019 நாடாளுமன்ற தேர்தலில் 3.66 சதவீதம், 2021 சட்டப்பேரவை தேர்தலில் 2.62 சதவீதம் வாக்குகளை தமிழக பாஜக பெற்றிருந்தது. இதனை 2024 நாடாளுமன்ற தேர்தலில் 11.24 சதவீதமாக மாற்றிக் காட்டினார் அண்ணாமலை. அதேநேரம் காங்கிரஸ் கட்சி பெற்றது 10.26 சதவீத வாக்குகள் மட்டுமே. இதுதான் அண்ணாமலையின் அரசியல் தந்திரமும், மந்திரமும் கூட.

### சவால் விட்ட சீமான்- சாதித்த அண்ணாமலை

2024 நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக பாஜக கூட்டணிக்கு சவால் விடுத்த சீமான், பாஜக தங்களைவிட ஒரு சதவீதம் வாக்கு அதிகமாக பெற்றுவிட்டால், நாம் தமிழர் கட்சியை கலைத்துவிடுவதாக கூறினார். ஆனால் இந்தத் தேர்தலில் சீமான் பெற்றது 8.21 சதவீதம் வாக்குகள் மட்டுமே. அரசியலில் சவால் எல்லாம், தாமரை இதழில் தண்ணீரை ஊற்றுவது போல தான். அண்ணாமலையை பொறுத்தமட்டில் சீமான் மீது நன்மதிப்பு கொண்டுள்ளார். இருவருக்கும் இடையிலான நட்பை நாடறியும்.

### பாஜக-வில் தேசிய அளவில் பொறுப்பு ஏற்பாரா?


தமிழக பாஜகவில் ஏற்கனவே தலைவர்களாக இருந்தவர்கள் மத்திய அமைச்சர், ஆளுநர், தேசிய அளவில் கட்சி பொறுப்பு வழங்கி கௌரவித்து வருகிறது, அக்கட்சி தேசிய தலைமை. எல்.முருகன், இரண்டாவது முறையாக மத்திய இணை அமைச்சராக உள்ளார். தமிழிசை சவுந்திரராஜன், ஆளுநராக இருந்தார். மூத்த நிர்வாகிகளான எல்.கணேசன், சிபி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் ஆளுநராக பதவி வகித்து வருகின்றனர். அந்த வகையில் தமிழக ஹீரோ அண்ணாமலையும், தேசிய நீரோட்டத்தில் கலந்து, சேவை செய்ய வாய்ப்பு இருப்பதாக மேலிட தகவல்கள் கூறினாலும், தமிழகத்தில் இருந்து சாதிக்க வேண்டும் என்பதே பெரும்பாலானோரின் எண்ணம்.

# மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்



- **அதிமுக தேர்தல் பிரசாரம் தொடங்கியது**
- **எடப்பாடி பழனிசாமி செல்லும் இடமெல்லாம் மக்கள் எழுச்சி**
- **நீ அதுக்கு சரிப்பட்டு வரமாட்ட- ஸ்டாலின்**
- **நீ எதுக்கும் சரிப்பட்டு வரமாட்ட- இபிஎஸ்**

2026ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் ஜுரம் தமிழகத்தில் இப்போதே பற்றிக் கொண்டது. அதிமுக - பாஜக கூட்டணி உறுதி செய்யப்பட்ட நிலையில் கூட்டணிக்கு தலைமை தாங்கும் அதிமுக தேர்தல் பிரசாரத்தை முதல் ஆளாக தொடங்கி விட்டது. மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற வாசகத்தோடு ஆட்டம் ஆரம்பமாகி விட்டது.




கடந்த ஜூலை 7ம் தேதி கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள வனபத்ரகாளியம்மன் கோயிலில் தரிசனம் செய்த கையோடு, பிரசார களத்திற்கு வந்தார் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி. அதிமுகவுக்கு கடந்த 2021ம் ஆண்டு தேர்தலில் 66 தொகுதிகள் கிடைக்க பெரும் உதவியாக இருந்தது, கொங்கு மண்டலம்.

கோவை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட கவுண்டர்கள் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் திமுகவை அதள பாதாளத்துக்கு தள்ளி, அனைத்து தொகுதிகளிலும் வெற்றிக் கனியை சுவைத்தது அதிமுக. இதற்கு கைமாறு செய்யும் வகையில் கோவை மாவட்டத்தில் இருந்தே தேர்தல் பிரசாரத்தை தொடங்கி இருக்கிறார் இபிஎஸ். முதல்கட்ட பிரசாரத்தை கோவையில் தொடங்கி, கடலூர், அரியலூர் என மத்திய மாவட்டங்களை குறிவைத்து பிரசாரத்தில் முழங்கி வருகிறார். அவரது பிரசார களம் பல கட்டங்களாக திட்டமிடப்பட்டுள்ளது.

திமுக அரசு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அதிமுக செயல்படுத்திய திட்டங்களுக்கு (உதாரணத்துக்கு அம்மா திட்டத்தை, உங்களுடன் ஸ்டாலின் ) பெயர் மாற்றி, திமுக அரசு ஸ்டிக்கர் ஒட்டி செயல்படுத்துவதாக பிரசாரத்தில் குற்றம்சாட்டி வருகிறார்.

அதிமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டு, திமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட தாலிக்கு தங்கம், குடிமராமத்து திட்டம், மாணவர்களுக்கு லேப்டாப் உள்ளிட்டவை பற்றி எடுத்துக் கூறி பொதுமக்களிடம் ஆதரவை பெற்று வருகிறார். அதிமுக- பாஜக கூட்டணியை விமர்சித்து வரும் ஸ்டாலின், உதயநிதிக்கு, சவுக்கால் அடித்தது போல் பதில் சொல்வதால் தொண்டர்களின் ஆரவாரம் பிரசார களத்தில் மிளிர்கிறது.


### ஆந்திர பாணியில் பேருந்து பிரசாரம்

அதிமுக தனது பிரசார யுக்தியை ஆந்திரா பாணியில் மாற்றி உள்ளது. அங்கு மறைந்த முன்னாள் முதல்வர் ராஜசேகர ரெட்டி, பேருந்தில் பயணித்து தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வெற்றியும் பெற்றார். அதேபோல் அவரது மகனான ஜெகன்மோகன் ரெட்டியும் பிரசாரம் செய்து, 5 ஆண்டுகளாக ஆட்சிக் கட்டிலை அலங்கரித்தார். வழக்கமான வேன் பிரசாரத்தை தவிர்த்து, பேருந்து பிரசாரம் அதிமுகவுக்கு பெரிய அளவில் கை கொடுத்துள்ளது.

### சரிப்பட்டு வரமாட்ட- சூடிபிடிக்கும் களம்

இபிஎஸ் பிரசாரத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய முதல்வர் ஸ்டாலின், சுந்தரா டிராவல்ஸ் திரைப்படத்தை குறிப்பிட்டு, அதில் புகை வருவது போல் இபிஎஸ், பொய்யும், அவதூறாக பேசுவதாகவும், நீ அதுக்கு சரிப்பட்டு வரமாட்ட என்ற பாணியில் கிண்டல் அடித்தார். இதற்கு அவரது ஸ்டைலிலேயே பதில் சொன்ன எடப்பாடி பழனிசாமி, நீ எதுக்கும் சரிப்பட்டு வரமாட்ட என தடாலடி காட்டினார்.

# மதிமுகவில் மல்லுக்கட்டு



- துரை வைகோ - மல்லை சத்யா மோதல்
- தனயனுக்கு ஆதரவு கரம் நீட்டும் வைகோ
- குமுறி குமுறி அழும் மல்லை சத்யா



1994ம் ஆண்டு மே 6 அன்று, திமுகவில் பிரசார பீரங்கியாக இருந்த வைகோ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் என்ற பெயரில் புதிய கட்சி தொடங்கி, கருணாநிதிக்கு ஷாக் கொடுத்தார். எம்ஜிஆருக்கு பிறகு பலம் பொருந்தியவராக இருந்ததால், திமுக தலைமை கலக்கம் அடைந்தது. ஆரம்பத்தில் திமுகவை எதிர்த்து அரசியல் செய்த வைகோ, தற்போது திமுக கூட்டணியில் இணைந்து, கலந்தே விட்டார்.

32 ஆண்டு கால மதிமுக பயணத்தில், வைகோவுடன் துணை நின்ற நாஞ்சில் சம்பத், ஈரோடு கணேசமூர்த்தி (2024 நாடாளுமன்ற தேர்தலில் சீட் கொடுக்காததால் விஷம் குடித்து தற்கொலை செய்தார் ), திருப்பூர் துரைசாமி உள்ளிட்டோர் அவருடன் இல்லை. ஆனால் ஆரம்ப காலம் தொட்டு, வைகோவின் நிழலாக அவரைப் போலவே சொல் வீச்சு நாயகனாக, வைகோவுக்கு அடுத்தகட்டத்தில் துணை பொதுச்செயலாளராக இருந்து வரும் மல்லை சத்யாவுக்கும் இப்போது கட்சியில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மதிமுக முதன்மை செயலாளராக உள்ள துரை வைகோவுக்கும், மல்லை சத்யாவுக்கும் இடையே கருத்து மோதல்கள் ஏற்பட்டதே பிரச்சினைக்கு காரணம். மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மற்றும் மூத்த நிர்வாகிகள் தலையிட்டு இருவரையும் சமாதானம் செய்து வைத்தனர்.

இந்நிலையில் செய்தி ஊடகங்களுக்கு பேட்டி அளித்த வைகோ, " மல்லை சத்யாவை உடன் பிறவாத தம்பியாகத் தான் நினைத்தேன். என்னைப் பற்றி மிக மோசமாக, பேசக்கூடிய நபர்களுடன் தொடர்பில் இருக்கிறார். பிரபாகரனுக்கு மாத்தையா துரோகம் செய்தது போல எனக்கு மல்லை சத்யா துரோகம் செய்துவிட்டார். கட்சியில் இருந்து யார் வெளியேறினாலும் தாராளமாக வெளியேறி கொள்ளலாம் என்றும், யார் வெளியேறினாலும் கட்சிக்கு எந்த பாதிப்பும் இருக்காது. மல்லை சத்யாவின் பின்னணியில் திமுக இருப்பதாக கூறமுடியாது. அது உண்மையும் இல்லை" என்றும் புது குண்டை தூக்கிப்போட்டார்.

இதற்கு பதிலளித்து பேசிய மல்லை சத்யா, "வைகோ சொன்ன வார்த்தையைத் தாங்கிக் கொள்ள முடியாத மனவேதனையில் இருக்கிறேன். குடும்ப அரசியலை எதிர்த்து கட்சி தொடங்கிய வைகோ, துரை வைகோவுக்கு கட்சித் தலைமையை வழங்குவதற்குத் தயாராகி விட்டார். இதுவரை அவரது உயிரை மூன்று முறை காப்பாற்றியிருக்கிறேன். ஆனால், இப்போது வைகோ, தனது மகனுக்காக, எனக்கு துரோகிப் பட்டம் கொடுத்து கட்சியிலிருந்து வெளியேற்றப் பார்க்கிறார்" என அதிரடி காட்டினார்.

தனயனுக்காக ஆதரவு கரம் நீட்டும் வைகோ, கட்சிக்காக உழைத்தவர்களை கண்டும் காணாமல் இருப்பது கட்சிக்கு அவ்வளவு நல்லது அல்ல என்ற குரலும் பலமாக ஒலிக்கக் தொடங்கி உள்ளது.

மதிமுகவில் எத்தனையோ பெரும் தலைகள் இருந்த காலம் மாறி, தற்போது இருக்கும் ஒரு சில தலைவர்களும் சென்றுவிட்டால் கட்சி கம்பெனியாக மாறிவிட்டது என்றே பொருள் என்றும் அரசியல் வட்டாரத்தில் டாக் பெரிய அளவில் உள்ளது.




RAAM
ATHER
Own IT.
BOUNCE IT.
Innovative Design
Limitless Potential
Our New 2025 Ather 450
Nungambakkam, Chennai.


fast track
Taxi App
Fast , Safe and Affordable
Your Fastrack Taxi awaits
Book a Cab Now
NO CANCELLATION
NO BARGAINING
ALWAYS ON TIME
fast track
TIAGO
25
fast track
Taxi
Scan and Book
Download Now
DOWNLOAD THE FASTTRACK TAXI APP NOW


PeeYesYem HYUNDAI
DRIVE TO SUCCESS
HYUNDAI
Special
Aadi
OFFERS
This July, it's raining deals
at PeeYesYem showrooms.
VENUE benefits up to
85 000*
GRAND i10 NIOS benefits up to
65 000*
EXTER | benefits up to
60 000*
i20 | benefits up to
55 000*
Listen to your Dil or the Deals,
You will bring home a Hyundai!
CONTACT NOW
9952922200 \ 9600114000
OUR LOCATIONS
Chennai | Madurai | Tuticorin | Ramnad
Karaikudi | Sivagangai | Kovilpatti | Tiruchendur.




TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH